**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-122/2025**
**Dated :07.05.2026**
**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (DefactoComplainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருதாம்பாள் | வயது | : | 65 |
| தந்தை பெயர் | : | ராமச்சந்திரன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | மருங்கூரணி | தொழில் | : | வீட்டுக் குடித்தனம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

( எதிரி ஆஜர்.)
முதல் விசாரணை

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். சாட்சி ராமச்சந்திரன் எனது கணவர் ஆவார். கடந்த 2025 ஆம் ஆண்டு வைகாசி மாதம் புதன் கிழமை தேதி ஞாபகம் இல்லை. இரவு சுமார் 8.00 மணியளவில் ஆஜர் எதிரியும் எனது மூத்த மகன் ரெங்கநாதனும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது எனது கணவர் அவர்களை வம்பிழுத்தார். ஆஜர் எதிரியும் எனது கணவரும் சண்டை போட்டு கட்டிக்கொண்டு விழுந்து உருண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதா என்றால் எனக்கு எழுத படிக்கத் தெரியாது.

2. எதிரி எனது மகன் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டோம். நான் கைரேகை வைத்தும் எனது மகன் கையொப்பம் செய்தும் சமாதான மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரி மீது மேல்நடவடிக்கை தேவையில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**( சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya sakshya Adhinayam'2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார்.**

**<u>அதனால், நீதியின் பொருட்டு, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் விசாரணையில், கடந்த 04.06.2025 ஆம் தேதி இரவு 8.30 மணியளவில் நானும் எனது கணவரும் எங்கள் வீட்டு வாசலில் உட்கார்ந்து இருந்த போது அங்கு வந்த எதிரி குடிக்க பணம் கேட்டு கொடுக்காததால் எங்களை அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த கத்தியால் எனது கணவரின் கழுத்தில் கீறி காயத்தை ஏற்படுத்தினார் என்றும் கத்தியை காட்டி கொல்லாமல் விட மாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததார் என்றும் இது சம்மந்தமாக போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரி எனது மகன் என்பதால் அவருடன் சமாதானமாகி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.07 17:08:11 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**